1981 ஏப்ரல் 25] [திரு. நன்னிலம் அ. கலையரசன்]

(ஆ) படுக்கை வசதிகள் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இல்லை.

கூக்கல் துறையிலுள்ள அரசு மருத்துவமனை

* வினா எண் 885.—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி கூக்கல் துறையில் அரசு மருத்துவமனைக்குக் கட்டிடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் கட்டத் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டிடமும் மற்றும் இம்மருத்துவ மனையில் பணி புரியும் பணியாளர்களுக்காகக் குடியிருப்பும் கட்டுவதற்காக ரூ. 7,30,000 (ரூபாய் ஏழு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) அங்கீகரித்து 10—3—1981 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, இந்த அரசாணையை வெளியிட்டதற்காக மகிழ்ச்சி. அதற்கு நன்றி செலுத்துவதோடு இந்தக் கட்டிடம் கட்ட எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை ஒதுக்கப்பட்டது என்பதையும் இந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7.30 லட்சம் ரூபாய் என்று சொல்லி இருக்கிறேன். அது Construction of buildings and Staff Quarters இந்த இரண்டுக்குமாக நாம் ஒதுக்கி இருக்கக்கூடிய பணம் Construction of buildings -க்கு மட்டும் ஏறத்தாழ 5 லட்சம் ஆகும். மீதியுள்ள 2.30 லட்சம் அந்த ஸ்டாப்புக்காகப் பயன்படும். அதுமட்டுமல்லாமல், Hill Area Development Scheme என்ற ஸ்கீம் இருக்கிறது. அந்த ஸ்கீம் அடிப்படையில் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இன்னும் என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, ஆஸ்பத்திரிக்கு வேண்டிய கட்டிடங்கள், பணியாளர்களுக்கு இருப்பிடம் தயாரிப்பதோடு அங்கே படுக்கை வசதிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களைக் கொடுப்பார்களேயானால், அது பரிசீலிக்கப் படும்.

இராஜபாளையம் நாய்களின் இனப் பெருக்கத் திட்டம்.

*வினா எண் 886.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாய் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் இனப்பெருக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நாய் வளர்க்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே இராஜபாளையம் நாய்களின் இனத்தைப் பெருக்க சைதாப் பேட்டையிலே ஒரு கால்நடை மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, உலகத்திலேயே வீரத்திற்கும், விவேகத்திற்கும் பெயர் பெற்றது இராஜபாளையம் நாய்கள், அந்த இராஜபாளையம் நாய்கள் பிறந்த மண்ணிலேயே இனப்பெருக்கம் செய்ய அரசு நாய்ப் பண்ணையை ஏற்படுத்துமா ? இன்றைக்கு வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கவேண்டும் என்று விளம்பரப்படுத்துவதைப்போல, பாதுகாப்பாக இருக்க வீட்டுக்கு ஒரு நாய்—அதுவும் இராஜபாளையம் நாய்—வளர்க்க வேண்டும் என்று அரசு விளம்பரம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பதில் கூறும்போது நாய் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் நாய்களை வளர்க்க சைதாப்பேட்டையில் கால்நடைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு இனப்பெருக்கம் செய்து கொண்டு வருகிறது என்று கூறினேன். இதற்காக நாய்கள் வாங்க 5 ஆயிரம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, 10 இராஜபாளையம் நாய்கள் 2,135 ரூபாயில் வாங்கப் பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய பெரிய பணக்காரர்கள், நடிகர், நடிகைகள் எல்லாம் அல்சேஷன் நாய்களைத்தான் வளர்க்கிறார்கள். ஆனால் பாதுகாப்புக்குச் சிறந்த நாய்கள் இராஜபாளையம் நாய்கள்தான் என்று அரசு பெரிய அளவில் விளம்பரம் செய்யுமா? அந்த இராஜபாளையம் நாய்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமா ? அப்படி ஏற்றுமதி செய்யப்படும் நாய்களைப் பராமரிக்க ஊர்மட்டக் குழு ஒன்றினை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?